செய்தி வெளியீடு எண் : 2196 நாள் : 05.12.2022

**ஜி–20 மாநாடு தொடர்பாக புதுதில்லி குடியரசு தலைவர் மாளிகையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

**திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார்.**

**நாட்டிலேயே முன்னோடியாக காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு தமிழ்நாடு உருவாக்கியுள்ள 'தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்' போன்ற முக்கிய கருத்துக்களை முன்வைத்து ஆற்றிய உரை.**

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களே!

மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அவர்களே!

பல்வேறு மாநிலங்களின் மாண்புமிகு முதலமைச்சர்களே!

அரசியல் கட்சித் தலைவர்களே!

ஒன்றிய அமைச்சர் பெருமக்களே!

அனைவருக்கும் வணக்கம்.

2023–ஆம் ஆண்டுக்கான ஜி–20 தலைமையை இந்தியா ஏற்றிருக்கும் வேளையில் நமது மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு முதற்கண் எனது பாராட்டுகள். இது நம் நாட்டுக்கு மிகவும் பெருமை தரக்கூடிய ஒன்றாகும். உலக அளவில் பல்வேறு நாடுகளிடையே புரிதலை மேம்படுத்துவதில் நாம் மிக முக்கியப் பங்கை ஆற்ற வேண்டியுள்ளது. ஜி–20 நாடுகள் மட்டுமல்லாமல் அனைத்து உலக நாடுகளாலும் இந்தியா கூர்ந்து கவனிக்கப்படுகிறது.

'அமைதி, அகிம்சை, நல்லிணக்கம், சமத்துவம், சமநீதி' ஆகிய உயர் விழுமியங்களை உலக அளவில் கொண்டு செல்ல நமது மாண்புமிகு பிரதமர் அவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தியா ஜி–20 தலைமையை ஏற்றதைத் தொடர்ந்து நடத்தப்படவுள்ள கருத்தரங்குகளுக்குத் தமிழ்நாடு முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என நான் உறுதியளிக்கிறேன்.

காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்காக இந்திய அரசு நிர்ணயித்துள்ள இலக்குகளை எட்டுவதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இயற்கைப் பாதுகாப்பு இயக்கங்களை நிர்வகிக்கவும், காலநிலை மாற்றத்தைக் கையாளவும் 'தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனம்' என்ற பெயரில் சிறப்பு நோக்க நிறுவனத்தை (SPV) உருவாக்கியுள்ளோம்.

உலக அளவில் இந்தியா அளித்துள்ள உத்தரவாதங்களைக் காப்பாற்றுவதற்கு அனைத்து வகையிலும் தமிழ்நாடு உறுதுணையாக இருக்கும். இந்தியாவின் பெருமையை உலகிற்குப் பறைசாற்றுவோம்!

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பேசும் வாய்ப்புக்காக நமது மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்!

Hon'ble Prime Minister Thiru. Narendra Modi!

Hon'ble Union Home Minister Thiru. Amit Shah!

Hon'ble Chief Ministers of various states and leaders of political parties!

Hon'ble Union Ministers!

Vanakkam to all of you.

I congratulate our Hon'ble Prime Minister Thiru Narendra Modi on India assuming the G20 Presidency for 2023.

This is a matter of great pride to our country and we have a very important role to play in promoting international understanding.

India is keenly observed by, not just G20 countries, but all countries around the globe.

I strongly believe our Hon'ble Prime Minister will use this opportunity to promote the values of peace, non-violence, harmony, equality and equal justice all over the world.

I assure that Tamil Nadu will extend its full support and co-operation in conducting the conferences to mark India's G20 Presidency.

In line with India's climate change targets, Tamil Nadu has been taking up many efforts. We have set up a Special Purpose Vehicle called "TN Green Climate Company" to manage nature conservation missions and tackle climate change.

We will continue to support Indian Government in all ways, to fulfill its global commitments.

We will show India's greatness to the world.

I thank our Prime Minister on behalf of the people of Tamil Nadu for this opportunity.

Nanri, Vanakkam!

•••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in